

**அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்**
**திருச்செந்தூர்**
**தூத்துக்குடி மாவட்டம்**

# திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் கருங்கல்லால் ஆன புதிய கிரிபிரகார மண்டபம் கட்டும் பணிக்கு நன்கொடையாளர்கள் விருப்பம் தெரிவிப்பதற்கான அழைப்பு

திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலானது, முருகப் பெருமானின் ஆறுபடை வீடுகளில் இரண்டாவது படை வீடு ஆக போற்றப்படுகிறது. இத்திருக்கோயில் மட்டுமே கடற்கரையினை ஒட்டி அமைந்துள்ள முருகப்பெருமானின் சிறப்புப் பெற்ற திருத்தலம் ஆகும்.

"கம்பீரமாக உயர்ந்து நிற்கும் 137 அடி உயர இராஜ கோபுரம்" இத்திருக்கோயிலின் தனிச் சிறப்புகளில் ஒன்றாகும். இத்திருக்கோயில் கருவறையில் மூலவர் அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி, சிவபூஜைக் கோலத்தில் அருட்காட்சி தருகிறார். மகா மண்டபத்தில் அருள்மிகு சண்முகப் பெருமான், வள்ளி தேவசேனையுடன் அருட்காட்சி தருகிறார்.

இத்திருக்கோயில் வளாகத்தில் ஏற்கனவே இருந்த வெளிச்சுற்றில் உள்ள கிரிபிரகார மண்டபத்தின் ஒரு பகுதி கடந்த 2017ஆம் ஆண்டு எதிர்பாராத விதமாக இடிந்து விழுந்தது. இதன் காரணமாக இத்திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களின் பாதுகாப்பு கருதி மொத்த RCC பிரகார மண்டபம் முழுமையாக இடித்து அகற்றப்பட்டது.

இத்திருக்கோயிலின் பிரகார மண்டபத்தினை கருங்கல் கொண்டு புதிய கிரிபிரகார மண்டபமாக கட்டப்பட வேண்டுமென்பது இத்திருக்கோயில் பக்தர்களின் நீண்ட நாள் கோரிக்கை ஆகும். மாண்பமை உயர்நீதிமன்றத்தின் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் மூலம் தேவையான அங்கீகாரம் பெற்ற பின்னர் கருங்கல்லால் ஆன புதிய கிரிபிரகார மண்டபம் கட்டப்பட உள்ளது. கருங்கல்லால் ஆன புதிய கிரிபிரகார மண்டபம் கட்டுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஸ்தபதியால் தயாரிக்கப்பட்ட வரைபடத்திற்கான அங்கீகாரம் ஏற்கனவே இந்து சமய அறநிலையத் துறையிலிருந்து பெறப்பட்டுள்ளது. இந்த திட்டத்திற்கான மதிப்பீடு ரூபாய் 90 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

இத்திருக்கோயிலின் கருங்கல்லால் ஆன புதிய கிரிபிரகார மண்டபம் கட்டுவதற்கு நன்கொடையாளர்களின் பங்களிப்பு பெறுவதென இத்திருக்கோயில் நிர்வாகம் விரும்புகிறது. நன்கொடையாளர்கள் பங்களிப்புச் செய்வதற்கான நிபந்தனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. நன்கொடை இத்திருக்கோயில் பெயரில் நேரடியாக வழங்கப்பட வேண்டும். திருக்கோயில் நிர்வாகம் குறிப்பிடும் தேதிக்குள் நன்கொடையினை வழங்க வேண்டும்.

2. இத்திருக்கோயில் கிரிபிரகார மண்டபம் கட்டும் பணியினை காரணம் காட்டி பிற நபர்களிடமிருந்து நன்கொடை தொகையாகவோ பொருளாகவோ வசூலிக்கக் கூடாது.

3. மேற்படி திட்டத்திற்கு அளிக்கப்படும் நன்கொடையினை காரணம் காட்டி வருங்காலங்களில் இத்திருக்கோயிலில் எந்தவிதமான சலுகை அல்லது பிரத்யேக உரிமை கோரக் கூடாது.

4. ரூபாய் 1 கோடி மற்றும் அதற்கு மேல் நன்கொடை அளிக்கும் நன்கொடையாளர்கள் பெயர் கல்வெட்டில் பொறிக்கப்படும்.

மேற்படி திட்டத்திற்கு தங்களது பங்களிப்பினை வழங்க விரும்பும் நன்கொடையாளர்கள் இத்திருக்கோயில் நிர்வாகத்தினை நேரில் அல்லது எழுத்து மூலமாக தொடர்பு கொள்ள அன்புடன்கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஆர். கண்ணன் ஆதித்தன்,
தக்கார்,
அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்,
திருச்செந்தூர் நகர் மற்றும் வட்டம்,
தூத்துக்குடி மாவட்டம்.
அஞ்சல் குறியீடு எண் – 628 215.

சா.ப.அம்ரித், இ.ஆ.ப.,
செயல் அலுவலர்,
அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்,
திருச்செந்தூர் நகர் மற்றும் வட்டம்,
தூத்துக்குடி மாவட்டம்.
அஞ்சல் குறியீடு எண் – 628 215.
(தொலைபேசி எண் (04639) 245476
மின்னஞ்சல்: tiruchendurmurugan@tnhrce.com.